# நொச்சியாகம பிரதேச சபை

# அநுராதபுர மாவட்டம்

-------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 23 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 11 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜூன் 20 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

---------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நொச்சியாகம பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---------------------------------------------

(அ) மீளாய்வாண்டின் போது வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தில் இருந்து சபைக்கு வழங்கப்பட்டுள்ள 784 கல்வணய்ஸ் குழாய்களின் பெறுமதி ரூபா 868,000 இனை நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கையிருப்பின் பெறுமதி ரூபா 838,267 தொகை எனினும் நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 3,713,385 தொகை என ரூபா 2,875,118 இனால் மிகையாகக் காட்டப்பட்டுள்ளது.

(இ) நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த தொங்கல் கணக்கின் மீதி ரூபா 217,150 ஆகும்.

1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

-------------------------------------------------------------------

கூட்டுத்தொகை ரூபா 12,091,160 இற்கான 03 சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் விடயங்கள் தொடர்பாக உரிமையை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள் / விரிவான பட்டோலை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2. நிதி மீளாய்வு

-------------------------

2.1 நிதி விளைவுகள்

--------------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் செயற்பாட்டு பற்றாக்குறை ரூபா 551,007 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் செயற்பாட்டு மிகை ரூபா 10,569,980 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

----------------------------------

2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டிற்காக சமர்ப்பித்திருந்த மதிப்பிட்டு வருமானம் உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | உள்ளவாறான | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| (i) | வீதவரி | 1,769 | 2,643 | 3,244 |
| (ii) | வாடகை | 5,468 | 5,343 | 6,080 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 3,282 | 3,329 | 169,940 |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 14,685 | 16,622 | 3,899 |

2.2.2 நிலுவை கடை வாடகை

------------------------------------------

மீளாய்வாண்டு இறுதியில் நிலுவை கடை வாடகை ரூபா 5,006,675 ஆக காணப்பட்டதுடன் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 159(1) இன் பிரகாரம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.3 நிலுவை வீத வரி

-----------------------------

மீளாய்வாண்டு இறுதியில் திரண்ட நிலுவை வீதவரி ரூபா 3,243,529 ஆக காணப்பட்டதுடன் அந்த நிலுவை வரியை அறவீடு செய்வதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 158 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.4 வர்த்தக அனுமதிப்பத்திரக் கட்டணம்

--------------------------------------------------------------

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 149 இன் பிரகாரம் 1968 இன் 14 ஆம் இலக்க சுற்றுலா அபிவிருத்தி சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஹோட்டல்களுக்காக வர்த்தக அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------------

3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

----------------------------------------------------

3.1.1 காணிகள் மற்றும் கட்டிடங்களை உரித்தாக்காமை

-----------------------------------------------------------------------------------------

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 15 ஏக்கர் 09 ரூட் அளவிலான காணிகளின் உரிமை உள்ளூராட்சி மறுசீரமைப்பு சுற்று நிருப இலக்கம் 03 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.1.2 மயானம்

------------

1995 அக்டோபர் 06 திகதி இலங்கை குடியரசின் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்ததன் பிரகாரம் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள மயானங்கள் தொடர்பாக உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சின் 2006 நவம்பர் 14 திகதிய இலக்கம் PL/07/01/53 கொண்ட உள்ளூராட்சி மறுசீரமைப்பு சுற்று நிருப இலக்கம் 9 இன் பிரேரணைகள் மற்றும் விதப்புரைகள் அமுல் நடத்தியிருக்கவில்லை.

4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்